Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM • மக்கள் நாளிதழ்

க்கங்கள்–08

தம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | ஆடி -17 | 02-08-2003 | சனிக்கிழமை | ஓசை 165

கிளிநொச்சியில்
கணினி மையம்
TCC
கணினி விற்பனையாளரும் திருத்த சேவையாளரும்
(சி-8220) யாழ். சாலை, கிளிநொச்சி.

# புலிகளுக்கு அனுப்பப்பட்ட யோசனைகளை மாற்றம் எதுவுமின்றி எனக்கு அனுப்ப வேண்டும்

## சிறிலங்கா சனாதிபதி பிரதமருக்குக் கடிதம்

(கொழும்பு)

**இடைக்கால நிர்வாகம் தொடர்பாக விடுதலைப்புலிகளிடம் கையளிக்கப்பட்ட யோசனைகளை எதுவித மாற்றமும் இன்றித் தன்னிடம் அனுப்பி வைக்குமாறு சனாதிபதி சந்திரிகா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அறிவித்துள்ளார்.**

டுதலைப்புலிகளிடம் கையளிக்கப்பட்டுள்ள யோசனைகள் தமக்குக் கிடைத்த பின்னர் அது குறித்து புலிகளுடன் சம்பந்தப்பட்ட வொரு விடயம் குறித்தும் தாம் ச்சுவார்த்தை நடத்தத் தயார் நும் சிறிலங்கா சனாதிபதி பிரதமருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். மேலும் சமாதான நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்ட சில அமைச்சுக்கள் மாத்திரமன்றிச் சகலரும் தெரிந்துகொள்ளக் கூடியவகையில் விடுதலைப்புலிகளிடம் கையளிக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக யோசனைகள் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, புலிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள யோசனைகளுக்கும் நமக்குக் கிடைத்த யோசனைகளுக்

(08ஆம் பக்கம் பார்க்க)

## புதுவை இரத்தினதுரையின் "உலைக்களம்" யாழ். பல்கலையில் சிறப்பு வெளியீடு

விடுதலைப்புலிகளின் கலைபண்பாட்டுக்கழகப்பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்களின் உலைக்களம் நூல் வெளியீட்டுவிழா யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கைலாசபதிகலையரங்கில் நேற்றுப் பிற்பகல்3.50 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றது. யாழ்ப்பாண மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.இளம்பரிதி தலைமையில் நடைபெற்ற இந்த வெளியீட்டு விழாவில் பொது ஈகச் சுடரை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்தியாகம் ஏற்றி வைக்க தமிழீழ தேசியக்கொடியினை தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா ஏற்றிவைத்தார். வரவேற்புரை

(08 ஆம் பக்கம் பார்க்க)

## பிராந்திய அரசியலில் குழப்பத்தை புலிகள் ஏற்படுத்தமாட்டார்கள்

### உலைக்களம் நூல் வெளியீட்டில் பாலகுமாரன்

(வடமராட்சி)

இந்தியாவின் பிராந்திய அரசியலில் எந்தவொரு குழப்பத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகளிலும் விடுதலைப்புலிகள் ஈடுபடமாட்டார்கள் என விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் தெரிவித்துள்ளார்.விடுதலைப்புலிகளின் கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரையினால் வியாசன் எனும் பெயரில் எழுதப்பட்ட "உலைச் களம்" கவிதைத் தொகுப்பு வெளியீட்டு விழாவில் சிறப்புரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.இந்திய அரசு விரைவில் விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டைப் புரிந்து கொள்ளும் என நம்பிக்கை வெளியிட்ட அவர், நேர்மையான முறையில் இந்தியா உறவுகளை மேம்படுத்த முன்வந்தால் அதனைப் பரிசீலிக்க விடுதலைப் புலிகள் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவரை ஒரு மாதத்திற்கு மேலாக காணவில்லை

### யாழ்.மனித உரிமைக் குழுவிடம் முறையீடு

(யாழ்ப்பாணம்)

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் சந்தேகத்திற்கிடமான முறையில் காணாமல் போயுள்ளதாக மனித உரிமைகள்ஆணைக் குழுவின் யாழ் அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.பிரவீணன் சுலெக்சனா (வயது18) இவரது ஆறு மாதக் குழந்தையான பிரவீணன் கம்சிகா, இவரது சகோதரியான சற்குணசிங்கம் விபூசனா (வயது-30), சகோதரர்களான நற்குணசிங்கம் விபூசன் (வயது07) மற்றும் நற்குணசிங்கம் விஷ்ணு (வயது4) ஆகியோரே காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த யூன் மாதம் 27 ஆம் திகதி அன்று அதே பகுதியில் உள்ள உறவினர்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## உலைக்களம் நூல் வெளியீட்டில்...






## உயர்தரப் பரீட்சை முடிவுகள் அடுத்தவாரம் வெளிவரும்

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் அடுத்த வாரம் வெளியிடப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மகிந்த விஜயசிறி தெரிவித்தார்.

உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளை வெளியிடுவதற்கான இறுதிக்கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

இம்முறை உயர்தரப் பரீட்சையில் சுமார் இரண்டரை லட்சம் மாணவர்கள் தோற்றியுள்ளனர்.

மேலும் உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் இணையத்தளமூடாக வெளியிடப்படவிருப்பதாகவும் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

## நேரடிப் பேச்சுவார்த்தையையே அரசாங்கம் விரும்புகிறதாம்

விடுதலைப்புலிகள் விரைவில் சமர்ப்பிக்கவுள்ளதாக எதிர்பார்க்கப்படும் திருத்தியமைக்கப்பட்ட இடைக்கால நிர்வாகத் திட்டத்திற்கு எழுத்து மூலம் பதிலளிப்பதைவிட, நேரடியாக மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து, அங்கே அதுகுறித்துப் பேசுவதையே விரும்புவதாக அரசதரப்பினர் தெரிவித்துள்ளார்கள். சிறிலங்கா அரசாங்க உயர் மட்டத்தில் இது குறித்து விவாதிக்கப்பட்ட போது இந்த முடிவு எட்டப்பட்டதாகவும், இது விடயமாக நோர்வேயின் இலங்கைக்கான விசேட தூதுவர் ஜோன் வெஸ்பேர்க்கிற்கு தகவல் வழங்கப்பட்டிருப்பதாகவும் அரசியல் வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன. மீண்டும் மீண்டும் கடிதப் பரிமாற்றங்களை மேற்கொள்வது ஆரோக்கியமான கருத்துப் பரிமாற்றமல்ல, நேரடிப் பேச்சுவார்த்தைகள் மூலம் இதுகுறித்து ஆராயுங்கள் என்று முஸ்லிம் காங்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## குரங்குப் பாஞ்சான் காலம் காலமாக புலிகளின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது

### -திருமலையில் ஊடகவியலாளர் சந்திப்பில் தமிழ்ச்செல்வன்-

குரங்குப் பாஞ்சான் காலம் காலமாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலேயே இருந்து வந்துள்ளது. இது அரச படையினருக்குத் தெரியாமல் இருந்தது என்றால் குரங்குப் பாஞ்சான் முகாமை யுத்த காலத்தில் படையினர் நெருங்க முடியாமலிருந்ததுதான் காரணம் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் நேற்று திருமலை சம்பூரில் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

இம்முகாமை அகற்றுமாறு கூறுவது நியாயமற்றது இம்முகாம் விவகாரத்தை நாம் பெரிதாக எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. ஊடகங்கள்தான் இவ்விவகாரத்தைப் பெரிதாக மாற்றியுள்ளன. சமாதான முயற்சிகளைச் சீர்குலைக்கும் சக்திகளே இவ்விவகாரத்தைப் பயன்படுத்தி வருகின்றன. குரங்குப்பாஞ்சான் முகாமை நாம் சென்று பார்க்கத் தேவையில்லை, எமது திருமலை மாவட்டக் கட்டளைத் தளபதி பதுமன இம்முகாம் தொடர்பான உண்மை நிலைமையை எங்களுக்கு அறிவித்துவிட்டார் என்றும் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச் செல்வன் அவர்கள் தெரிவிததுள்ளார்.

அரசு சமர்ப்பித்துள்ள இடைக

(08 ஆம் பக்கம் பார்க்க)

## கைக்குண்டு வீச்சு

திருகோணமலை ஏகாம்பரம் வீதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றின் மீது நேற்றுமுன்தினமிரவு இனந்தெரியாத நபர்களால் கைக்குண்டொன்று வீசப்பட்டுள்ளது. இந்தக் கைக்குண்டு வீச்சினால் எவரும் காயமடையவில்லை எனினும் வர்த்தக நிலையத்தின் பெயர்ப்பலகை மற்றும் கதவு என்பன சேதமடைந்துள்ளன. இக்குண்டு வீச்சுக் குறித்து திருகோணமலை பொலிஸார் விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.

## வரி விளம்பரம்

**விஞ்ஞான கல்விநிலையம் கிளிநொச்சி**

G.A.Q,B.A.A/L ஆசிரியர் குழு தமிழ்-இ.வசிகரன்,இ.நாகரிகம்-S.சிவஞானம்,புவியியல்-ஞானம், மெய்யியல், அளவையியல் யோகராஜன். (3598)

**விஞ்ஞான கல்விநிலையம் கிளிநொச்சி**

*(பொன்னம்பலம் வைத்திய நிலையத்திற்கு அருகாமை)*

G.A.Q,B.A (யாழ். பேராதனை) வகுப்புக்கள் ஆரம்பம். 03-08-2003 ஞாயிறு காலை-9.00மணி

A/L கலைப்பிரிவு ஆரம்பம் காலை-8.00மணி. (3599)


# - நிரந்தர நியமனம் வழங்கக்கோரி -

# பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் சங்கம் போராட்டம் நடத்தத் தீர்மானம்

வவுனியா -கிளிநொச்சி மாவட்டங்களின் அனைத்து கல்வி வலயங்களுக்கும் உட்பட்ட பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் அனைவரும் நிரந்தர நியமனம் காலம் தாழ்த்தாது வழங்கப்படும்வரை மூன்றாம் தவணையிலிருந்து காலவரையறையற்ற புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது. இத்தீர்மானம் நேற்று முன்தினம் நடை பெற்றகூட்டத்தில் எடுக்கப்பட்டது.

இப் போராட்டத்தில் வடக்கு கிழக்கிலுள்ள அனைத்துக் கல்வி வலயங்களிலும்பணிபுரிகின்ற பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறு கிளிநொச்சி-வவுனியா மாவட்டங்களின் இணைந்த பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது.

அத்துடன் கல்வி சார் கல்வி சாராதஅமைப்புக்களும்இப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்குமாறும் இச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

## கிளி.வடிகால் அமைப்புக் குறித்து உயர் அதிகாரிகள் கலந்துரையாடல்

(அலுவலக செய்தியாளர்)

நீர்வழங்கல் வடிகால்சபை உயர் அதிகாரிகள் குழுநேற்று கிளி. மாவட்டத்திற்கு வருகை தந்து மாவட்ட வடிகால் அமைப்பு சம்பந்தமான கலந்துரையாடல்களில் ஈடுபட்டது.நீர் வழங்கல் வடிகால்சபை திட்டமிடல் பணிப்பாளர் கருணாரட்ன மற்றும் அதிகாரிகள் நேற்று நண்பகல் கிளிநொச்சி அரச செயலகத்திற்கு வருகை மேற்கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைச் சந்தித்து மாவட்ட வடிகால் அமைப்புத் தொடர்பாக கலந்துரையாடியதுடன் நேற்று பிற்பகல் துறைசார், அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளையும் சந்தித்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. (சோ)

## கால்நடை பராமரிப்புக் குறித்து ஒட்டுசுட்டானில் இடம்பெயர் சேவை

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் முல்லை மாவட்டச் செயலகமும், ஒட்டுசுட்டான் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களமும் இணைந்து நடாத்தும் இடம்பெயர் சேவை இம் மாதம் பின்வரும் ஒழுங்கிற்கமைய மேற்கொள்ளப்படவிருப்பதால், கால்நடை வளர்ப்போர் இதில் கலந்துகொண்டு பயன்பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது. 05ம் திகதி கருவேலங்கண்டல் கூழாமுறிப்பு, 04ம் திகதி கற்சிலைமடு பேராறு, 06ம் திகதி புளியங்குளம், ஒட்டுசுட்டான் வலதுகரை, 07ம் திகதி மணவாளன்பட்டமுறிப்பு, கரிப்பட்டமுறிப்பு, 08ம் திகதிஒலுமடு மாங்குளம், 12ஆம் திகதி அம்பகாமம் 13ஆம் திகதி இத்திமடு கோடாலிக்கல்லு, 14ம் திகதி தண்டுவான் பழம்பாசி, 15ம் திகதி சம்பளங்குளம் ஆகிய இடங்களில் இடம்பெறும் என பொருண்மிய செய்திக்குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (26)

## முக்கிய கலந்துரையாடல்

தொண்டர் ஆசிரியர் சேவையின் அடிப்படையில் புதிதாக நிரந்தர நியமனம் பெற்ற ஆசிரியர்கள், ஏற்கனவே ஆசிரிய பயிற்சியைப் பெறமுடியாத ஆசிரியர்களுக்குமான ஆசிரியர் பயிற்சி பற்றிய முக்கிய கலந்துரையாடல் இன்று காலை 10.00 மணிக்கு கிளி/வலயக்கல்விப் பணிமனைக் கல்வி வளநிலையத்தில் நடைபெறும். பொருத்தமானவர்கள் தவறாது பங்கு பற்றுமாறு கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் ப. அரியரத்தினம் அறிவிக்கின்றார்.

## கிளி. மாவட்ட பாடசாலை மாணவர்கள் சீருடைத் துணிக்கான விண்ணப்பம் கோரல்

(அலுவலக செய்தியாளர்)

2004 ஆம் ஆண்டிற்கான கிளி/ மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்குரிய சீருடைத் துணிகளைப் பெறுவதற்கான விண்ணப்பப்படிவங்கள் கிளி/ மாவட்டத்திற்கு வந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இது குறித்து கிளி/ மாவட்ட மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகன் அவர்களுடன் தொடர்பு கொண்ட பொழுது தெரிவிக்கையில்,2004 ஆம் ஆண்டு மாணவர்களுக்குரிய சீருடைத்துணிகள் விநியோகம் செய்வதற்கான நடைமுறைகள் கல்வி அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் மேற்படி 2004 ஆம் ஆண்டிற்கான சீருடைத் துணிகளைப் பெறுவதற்கான விண்ணப்பப்படிவங்கள்,பிரதேச செயலர் காரியாலயங்கள் பாடசாலைகள், கிராம அலுவலர்களின் காரியாலயங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளதெனவும் இம்மாதிரிப் படிவத்தினைப் பிரதி பண்ணி பூர்த்தி செய்து அவற்றினை அந்தந்தக் கிராம அபிவிருத்தி உத்தியோகஸ்தரிடம் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் தெரிவித்துள்ளதுடன் விண்ணப்பங்களின் முடிவுத் திகதி ஆகஸ்ட் 31 எனவும் அனைத்து மாணவர்களின் பெற்றோர்கள் மேற்படி விண்ணப்பப் படிவங்களை மேற்படி முடிவு திகதிக்கு முன்னதாகப் பூரணப்படுத்திக் கிராம சேவை அலுவலர்களிடம் ஒப்படைக்கும் வண்ணம் மேலதிக அரச அதிபர் வேண்டியுள்ளார். (சோ)


## பிற்போடப்பட்டுள்ளது

02.07.2003ல் புது/கந்தசாமி கோவில் கொடியேற்ற விழாவில் இடம் பெற இருந்த இசை நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தால் இடம் பெறமாட்டாது என்பதைக் கவலையுடன் அறியத் தருகின்றோம்.

இங்ஙனம்
திருகோணமலை
மாவட்ட இடம்பெயர்ந்த
மக்கள்

(3597)



## நெஞ்சை விட்டகலாத

## 5 ஆம் ஆண்டு நினைவில்

மடியில் முத்தாக 01 - 06 - 1979



மண்ணில் வித்தாக 03 - 08 - 1998

## லெப்டினன் அமலன்

இம்ரான் பாண்டியன் படையணி

வேலாயுதம் நகுலேஸ்வரன்

(நீர்வேலி மத்தி நீர்வேலி, யாழ்)

விடுதலை நோக்கியே வீறுகொண்டெழுந்து
ஜெயசிக்குறு களம் ஆடியவனே!
மூன்று முறிப்பிலே உன் மூச்சு
காற்றினிலே கலந்தது அமலனே!
உன் உடலைத்தான் மண்ணில் விதைத்தேன்
உன் உணர்வுகளை நெஞ்சில் சுமக்கின்றேன்.

மூன்று முறிப்பிலே வீரகாவியமான மாவீரர்களையும் இந் நாளில் நினைவு கூருகிறேன். நாளை நடைபெறவிருக்கும் மதிபோசன நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளு மாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

த.மு:-
க.ப.கணேசசுந்தரம்,
பெருந்தெரு,
3ம் வட்டாரம்,
முள்ளியவளை.

(சி-8245)

தகவல்:-
போராளி வே.அருள்மொழி
(அக்கா)



# நடுவப்பணியகம் - ஆயப்பகுதி, நிதித்துறை.

## பணிநிலை வேண்டுகைகள்

### 01.ஆய உதவியாளர்

புளியங்குளத்தில் அமைந்துள்ள ஆயக்கண்காணிப்பு நிலையங்களில் ஆய உதவியாளராகப் பணியாற்றுவதற்குக் கீழ்வரும் தகைமையுடையவர்கள் வேண்டப்படுகின்றனர்.

**தகைமை:**

1. க.பொ.த. (சா/த) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

### 02. வழிகாட்டுநர்

புளியங்குளத்தில் அமைந்துள்ள ஆயக்கண்காணிப்பு நிலையங்களில் வழிகாட்டுநர்களாகப் பணியாற்றுவதற்குக் கீழ்வரும் தகைமையுடையவர்கள் வேண்டப்படுகின்றனர்.

**தகைமைகள்:**

1. ஆங்கிலம் அல்லது சிங்களம் ஆகிய மொழிகளில் அல்லது இதில் ஏதாவது ஒரு மொழியில் சரளமாக உரையாடக்கூடிய ஆற்றல்.
2. க.பொ.த (சா/த) சித்தியடைந்திருத்தல்.

**பணி நிபந்தனைகள்:**

1. 3 மாதங்களைப் பயிற்சிக்காலமாகக் கொண்ட இந்நியமனம் பயிற்சிக்காலச் செயற்பாடுகளின் அடிப்படையில் நிரந்தரமாக்கப்படும்.
2. வேதனமும், ஏனைய படிகளும் ஆயப்பகுதிச் சுற்றறிக்கைகளுக்கமைய வழங்கப்படும்.

மேற்படி தகைமையுடையவர்களும், ஏற்கனவே யூலை மாதம் 9ஆம்,10ஆம்,11ஆம் நாள்களில் வெளியிடப்பட்ட எமது ஆயப்பகுதிப் பணிநிலை வேண்டுகைகளுக்கமைய சுயவிபரங்களை அனுப்பிவைத்தோரும் கிளிநொச்சியில் அமைந்துள்ள ஆயப்பகுதி நடுவப்பணியகத்திற்கு 2003.08.08 ஆம் நாள் காலை 10 மணிக்கு கல்விச் சான்றிதழ்கள், பிறதகைமைச் சான்றிதழ்கள் என்பவற்றுடன் நேரில் வருகை தரவும்.

மனிதவளப்பிரிவு
நடுவப்பணியகம்,
ஆயப்பகுதி.

(சி:8450)

தொ.பே.எண்.021-2225708

# அயோத்தியில் இராமர் கோவில் கட்டும் திட்டத்திற்கு ஜெயலலிதா ஆதரவு

## - பா.ஜ. கட்சி, விஸ்வஹிந்து பரிசட் பாராட்டு

(புதுடில்லி)

**பொது சிவில் சட்டத்தையும் இராமர் கோவில் கட்டு வதையும் ஆதரிக்கும் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா வுக்கு பாரதீய ஜனதாக்கட்சியும் விஸ்வஹிந்து பரிசட்டும் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளன.**

இது தொடர்பாகத் தமிழக பாரதீய ஜனதா தலைவர் சி.பி. ராதாகிருஸ்ணன் தமது ரதயாத் திரையின் ஒரு பகுதியாக சென்னை வந்த போது செய்தியாளர்களி டம் இவ்விடயம் பற்றிப் பேசி னார்.

பொது சிவில் சட்டம் கொண்டு வரவேண்டும் என முதலமைச்சர் ஜெயலலிதா கூறியிருப்பது, அவருக்குத் தேச நலனில் அக் கறை இருப்பதையே காட்டு கின்றது என்றும்,

இதுபோன்று இராமர் கோவில் கட்டுவதில் பாரதீய ஜனதா யாரை யும் நிர்ப்பந்திக்காது என்றும் தெரிவித்துள்ளார்.

அயோத்தியில் சர்ச்சைக் குரிய இடத்தில் இராமர் கோவில் கட்டுவதை தி.மு. கழகம் ஒரு போதும் ஏற்காது என்றும், அதற்காக ஒரு சட்டம் கொண்டு வரப்படுமானால் அதை ஆதரிக்க மாட்டோம் என்றும், கட்சித் தலைவர் மு.கருணாநிதி கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் சென்னை யில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேசிய ஜனநாயகக் கூட் டணியிலிருந்து தமது கட்சி வெளியேற இந்தப் பிரச்சினை காரணமாகிவிடக் கூடாது எனத் தாம் விரும்புவதாகக் கூறியுள் ளார்.

பொதுவான சிவில் சட்டத்தை திடீரென்று கொண்டு வருவதன் மூலம், சிறுபான்மையினர் மத்தி யில் குழப்பத்தை ஏற்படுத்த தாம் விரும்பவில்லை என்று கூறிய அவர், இதனால் பல சிக்கல்கள் ஏற்படக்கூடும் என் றும் கூறியுள்ளார்.



கம்போடியாவில் கிளர்ச்சிவாதிகளை அடக்கும் பொலிசார் ரோந்துப் பணியில் ஈடுபடுகின்றனர்.



14 நிமிடங்களில் 22 மைல் நீளங்கொண்ட ஆங்கிலக் கால்வாயை இறக்கைகள் மூலம் பறந்த சாதனை படைத்த அவுஸ்திரேலியர்.



1995ஆம் ஆண்டு பொஸ்னியா போரின் போது கொல்லப்பட்டோரில் 300 கிடங்குகளில் இருந்து 17 ஆயிரம் சடலங்கள் கண்டெடுக்கப்பட்ட, புதைகுழி ஒன்றில் மேலும் பரிசோதனையிலீடுபடும் நீதிமன்ற வைத்திய சேவையைச் சேர்ந்த பெண்.

## அல்-ஹைதாவின் அச்சுறுத்தல் உண்மையானவையே

### - அமெரிக்க சனாதிபதி புஷ்

(வாஷிங்டன்)

அல்-ஹைதா வலையமைப்பின் தாக்குதல்கள் குறித்த அச்சுறுத்தல்கள் உண்மையானவை என அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ் மீண்டும் தெரிவித்துள்ளார்.

கிளர்ச்சியாளர்கள் விமானங்களைக் கடத்தி தாக்கு தல்கள் நடத்தக் கூடிய திட்டங்கள் பற்றி தகவல்கள் கிடைத்துள்ளதாக நேற்று முன்தினம் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் அமெரிக்க உள்துறையமைச்சும் இத்தகைய அச்சுறுத்தலை விடுத்திருந்ததுடன், விமான நிலையப் பாது காப்பை மேம்படுத்துவதற்காக அதிக நிதி ஒதுக்குமாறு விடுக் கப்பட்ட வேண்டுகோளை மத்திய அரசு நிராகரித்துவிட்டது.

## காசாவில் யூதரைக் குடியேற்றும் புதிய திட்டம் இஸ்ரேல் அறிவிப்பு

(ஜெருசேலம்)

மத்திய கிழக்கில் சமாதானத் திட்டத்தை எதிர்த்து காசா பள்ளத்தாக்கில் யூதக்குடியிருப் பில் மேலும் புதிய வீடுகளை அமைக்கும் திட்டத்தை இஸ் ரேல் அறிவித்துள்ளது.

22 வீடுகளை அமைப்பதற் கான கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டிருப்பதாகவும், இது பரஸ்பர நம்பிக்கையை கட்டி யெழுப்பும் நடைமுறைகளுக்கு பாரிய தாக்கமாக அமைந்துள்ள தாகப் பலஸ்தீன அதிகாரிகள் குற்றம்சாட்டியுள்ளனர். அமெ ரிக்க அனுசரணையில் உரு வாக்கப்பட்ட சமாதானப் பாதை வரை படத்திட்டத்தில் பலஸ் தீன பிரதேசங்களில் குடியேற்ற நடவடிக்கைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கவேண்டுமென கூறப்பட்டுள்ளது. பாதை வரை படத்தின் முதற்கட்ட அமுலாக் கத்தில் இது முக்கியமானதென அமெரிக்க அதிகாரிகள் தெரி வித்துள்ளனர்.

## உலகில் இந்தியாவின் முக்கியத்துவம் உணரப்பட்டு வருகிறது

### - பிரதமர் வாஜ்பாய்

(புதுடில்லி)

உலக விவகாரங்களில் இந் தியாவின் முக்கியத்துவம் உண ரப்பட்டு வருவதாகப் பிரதமர் வாஜ் பாய் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் மாநிலங் களவையில் தமது சீனா, ரஷ்யா, ஜேர்மனி வெளிநாட்டுப் பயணம் பற்றிப் பேசிய வாஜ்பாய், அரு ணாச்சலப் பிரதேசத்தில் இந் திய-சீன எல்லைப் பிரச்சினை யில் இரு நாடுகளுக்குமிடையே கருத்து வேறுபாடு இருக்கிறது.

அருணாச்சலப் பிரதேச எல் லையில் ரோந்துப் பணியில் ஈடு பட்டிருந்த இந்தியப் பாதுகாப்பு படையினரிடம் சீன அதிகாரிகள் நடந்து கொண்ட முறை அவர் களுக்குப் பெருமை சேர்ப்பதாக இல்லை என்றும் பிரதமர் கூறி யுள்ளார்.

இந்தியாவும் சீனாவும் சேர்ந்து செயற்பட வேண்டும் என்பதே ஒவ்வொருவரின் கருத்து என்றும் அவர் மேலும் கூறியுள்ளா.

## சதாமின் 2 பெண் பிள்ளைகளுக்கு யோர்தான் அரசு புகலிடம்

சதாமின் இரண்டு பெண் பிள்ளைகளுக்கும் புகலிடம் வழங்க யோர்தான் முன்வந் துள்ளது.

மன்னர் அப்துல்லாவின் உதவியுடன் யோர்தானுக்குச் சென்றுள்ளனர். இவர்கள் இரு வரும் கடந்த சில மாதங்களாக ஈராக்கில் மறைந்திருந்ததாகத் தெரியவருகிறது.

இப்பெண்களின் கணவர்கள் சதாமின் அரசாங்கத்தினால் கொல்லப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது.

## எல்ஸல்வடோர் அரசு மீது சர். மன்னிப்புச்சபை கண்டனம்

(லண்டன்)

எல்ஸல்வடோரில் சிவில் யுத் தத்தின் போது காணாமற்போன சிறுவர்கள் பற்றி விசாரணை நடத்துமாறு சர்வதேச மன்னிப் புச் சபை அந்நாட்டு அரசை வலியுறுத்தியுள்ளது.

இந்த விடயத்தில் அரசாங்கம் காட்டும் அக்கறை போதுமான தாக இல்லையென மனித உரிமைகள் அமைப்பு கண்டித்துள்ளது.

எல்ஸல்வடோரில் 1980ஆம் ஆண்டு தொடக்கம் 1992ஆம் ஆண்டு வரை கடும் யுத்தம் நடந்தது. இந்த சமயத்தில் சிறுவர்கள் காணாமற்போனதைப் பற்றி 687 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக் கின்றன.

காணாமற்போன சில சிறுவர்கள் எல்ஸல்வடோரிலும் ஏனையோர் கௌதமாலா, கொண்டுராஸ் போன்ற அயல் நாடுகளிலும் பின்னர் கண்டு பிடிக்கப்பட்டார்கள்.




சியோல் நகரில் அமெரிக்க தகவல் சேவை நிலையம் ஒன்றிலிருந்து பத்திரிகையாளரிடையே உரையாற்றும் சர்வதேச ஆயுதக் கண்காணிப்புக் குழுவின் செயலர் ஜோன் பொல்டன்.



வடகொரியாவின் அணுவாயுதம் தொடர்பில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலைக்கு மத்தியில் சியோல் நகருக்கு தெற்கே பயிற்சியில் ஈடுபட்டுள்ள தென்கொரிய இராணுவம்.

# உலகின் மிகப் பெரிய விலங்குகள்

1. உலகின் மிகப் பெரிய விலங்கு நீலத் திமிங்கிலம்தான். இது நூறு அடி நீளமும் 200 தொன் பாரமும் கொண்டதாக வளரும். அதாவது சுமார் முப்பது யானைகளின் எடை! இவை பல காரணங்களினால் மனிதர்களின் வேட்டைக்குப் பலியாகி வருவதால் அருகி வரும் நீர் வாழ் உயிரினமாக இருக்கிறது.

2. ஆபிரிக்க யானை தான் மிகப் பெரிய தரை வாழ் மிருகம். சுமார் பத்தடி உயரம் வரை வளரும். இந்த யானைகள் ஆறு தொன் நிறை கொண்டதாக இருக்கின்றது.

3. திமிங்கிலச் சுறா தான் பெரிய மீனினமாகும். ஐம்பது அடி அல்லது அதற்கும் கூடிய நீளத்துக்கு வளரும்,, இது 45 தொன் பாரமுடையதாகக் காணப்படுகிறது. இதன் முட்டை 12 அங்குல நீளம் கொண்டது. உலகின் மிகப் பெரிய முட்டை! ஆனால் இது சாது. மனிதர்களை தாக்குவதில்லை. சிறிய நீர்வாழ் உயிரினங்களையே உணவாகக் கொள்கிறது.

4. **Wandering Albatross** என அழைக்கப்படும் கடற்பறவையே பெரும் பறவை ஆகும். இறக்கை விரித்து பறந்தால் 11 அடி நீளம் வரும். பூமத்திய ரேகையின் தென் கடற்பகுதியில் காணப்படும் இப்பறவை ஏகப்பட்ட மீன்களைத் தினமும் உணவாகக் கொள்கின்றது. மீன்கள் மாத்திரம் தான; வேறு எந்த உணவையும் ஏறெடுத்தும் பார்க்காது இப்பறவை.

5. உலகின் பறக்காத பறவை ஆபிரிக்க தீக்கோழி, வளர்ந்த தீக்கோழியின் உயரம் எட்டு அடி வரை இருக்கும். எடை 345 இறாத்தல். இதனால் களைப்பின்றி மணிக்கு முப்பது மைல் வேகத்தில் ஓட முடியும். பறவையினத்தில் பெரிய முட்டை இடும் பறவையான தீக்கோழியின் முட்டை மூன்றரை இறாத்தல் நிறைகொண்டதாக இருக்கும். சுத்தியலால் அடித்து உடைக்க வேண்டிய அளவுக்கு இதன் ஓடு உறுதியானது!

6. பாரமான பறக்கும் பறவையின் பெயர் கோரிக் பஸ்டர்ட். நீண்ட அலகைக் கொண்ட இப்பறவை கிழக்கு மற்றும் தெற்கு ஆபிரிக்காவில் காணப்படுகிறது. நிறை சுமார் 40 இறாத்தல்கள். இதன் எடை காரணமாக இதனால் நீண்ட தூரம் பறக்க முடியாது. அபாய நேரத்தில் மட்டும் குறுகிய தூரம் பறக்கும்.


7. உவர் நீர் முதலையே நீளமான ஊர்ந்து செல்லும் விலங்கு. தென்கிழக்கு ஆசிய மற்றும் வட அவுஸ்திரேலியாவில் காணப்படும் இம் முதலை ஆயிரம் இறாத்தல் எடை கொண்டதாகவும், 15 அடி நீளம் உடையதாகவும் வளரும். ஆனால் 28 அடி நீள முதலை ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மனிதன் இதன் விருப்பமான ஆகாரம்.

8. தென் அமெரிக்காவில் காணப்படும் அனகொண்டாவே பாம்புகளில் பெரியது. ரெட்டிகுலோட்டன் எனப்படும். தென்கிழக்கு ஆசியாவில் காணப்படும் மலைப்பாம்பும் மிகப் பெரியது தான். அனகொண்டா அதிக பாரமானது. ரெட்டிகுலோட்டனோ மிக நீளமானது. 25 அடி நீளம் வரை வளரும். இரண்டுமே இரையை நசுக்கிப் பிழிந்து தான் விளங்கும்.


9. கடல் ஆமை தான் உலகின் மிகப் பெரிய ஆமை. ஆயிரம் இறாத்தல் எடையும் ஆறு முதல் ஏழு அடி நீளமும் கொண்ட இக்கடலாமை **Lrather back sea turtle** என அழைக்கப்படுகிறது. முட்டை யிடுவதற்கு மட்டுமே இது கரைக்கு வரும்.

10. கொமடோ டிரகன் எனப்படும் மிகப் பெரிய தரை வாழ் பல்லி விஷத்தன்மை கொண்டது. 300 இறாத்தல் நிறையும் பத்து அடி நீளமும் கொண்ட இப்பல்லியின் எச்சில் விஷத் தன்மை கொண்டது.

11. மேற்கு ஆபிரிக்காவில் காணப்படும் கோலியாட் தவளையே மிகப் பெரிய தவளையாகும். பிடிக்கப்பட்ட ஒரு கோலியாத் தவளையின் நீளம் மூக்கில் இருந்து பின்னங் கால் வரையில் 32 அங்குலமாக இருந்தது. சாதாரணமாக ஏழு இறாத்தல் நிறை கொண்டிருக்கும். இதைவிடப் பெரிய கோலியாத்துக்களும் இருக்கலாம் என்று கூறப்படுகின்றது.




## 15 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த பறவைகள்




1. இதன் பெயர் டெரடஸ்ட்ரோ, நீரில் உள்ள சிறு உயிரினங்களை உண்டு வாழ்ந்த பறவை இனம் இது. இதன் நீண்ட அலகின் கீழ்ப் புறத்தில் பிரஷ் மாதிரி அமைந்திருப்பவை வளைந்து கொடுக்கக் கூடிய பற்கள் அலகை நீரில் அலையவிட்டு தண்ணீரை வடிகட்டி இரையை விழுங்கும் இந்த ஆதிகாலப் பறவை.

2. கெலொடெக்டைலஸ் என்பது இதன் பெயர். இதன் தலை பின்புறம் கூரான தன்மையுடன் அமைந்துள்ளது. இன விருத்திக்கான கூடலின் போது இது பயன்பட்டிருக்கும் என நம்பப்படுகிறது. மீன்களை அழுங்குப் பிடியாக பற்றிக் கொள்ள உதவும் வகையில் அலகின் முன்புறமாகக் கூரிய பற்கள் அமைந்துள்ளன.

3. ஓர்னிதோசெய்ரஸ் என்பது இதன் பெயர். இதன் அலகின் முனை வித்தியாசமானது. ஏனைய உயிரினங்களை பயமுறுத்தவும் தோழர்களை கவர்ந்திழுக்கவும் இதன் அலகு பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்கிறார்கள் உயிரியல் ஆய்வாளர்கள்.

4. சங்கரிப்டரஸ் என்பது இதன் பெயர். அலகின் முனை கூராக இருந்தாலும் முன் பகுதியில் பற்கள் கிடையாது. பெரிய மீன்களை குத்தவும் கிழிக்கவும் அலகை இது பயன்படுத்தி இருக்க வேண்டும். துண்டுகளான பின்னர் மென்று விழுங்கி இருக்கும் என்றும் ஆய்வாளர்கள் நம்புகின்றனர்.

5. டிமோ போர்டன்பது என்று இதன் பெயர். வாயின் முன்பகுதியில் நீண்ட கூரான பற்களும் உட்புறமாக சிறிய பற்களும் கொண்ட இப்பறவை இரையை ஒரே தடவையில் கௌவி வாய்க்குள் போட்டுக்கொள்ளும். வாயின் உட்புறமாக பக்கத்துக்கு 30 அல்லது 40 பற்களாக அமைந்துள்ளதால், இரையைக் கிழித்து, நொறுக்கி விழுங்கும் இப்பறவை.

இங்கே காணப்படும் பறவைகளும் இவை போன்ற மேலும் பல பறவைகளும் பதினைந்து கோடி ஆண்டுகளுக்கு முன்னர் உலகில் பறந்து திரிந்துள்ளன. இவற்றின் பாறைப் பதிவுகள் ஆங்காங்கே கண்டு பிடிக்கப்பட்டதையடுத்து இன்றைய பறவையினங்களின் இம்முன்னோடிகள் பற்றிய பல தகவல்கள் ஆராய்ச்சிகள் மூலம் வெளிவந்துள்ளன. ஒரு செல் உயிரினமாக ஆரம்பித்த பூமியின் உயிரின வளர்ச்சி டைனோசர்கள் என அழைக்கப்படும் மாபெரும் மிருகங்களை உருவாக்கி இருக்கிறது. இந்த டைனோசர்களின் ஒரு பிரிவே பறவைகளாகப் பறக்கத் தொடங்கி இருக்கின்றது. இவையும் பிரமாண்டமானவை தான். இறக்கைகளை விரித்தால் முப்பது முதல் நாற்பது அடி நீள இறக்கைகளைப் பயன்படுத்தி இவற்றில் சில பறந்திருக்கின்றன என்றும் ஆராய்ச்சியின் முடிவுகள் தெரிவிக்கின்றன.

## தண்ணீர்: ஆரோக்கியத்துக்கு எளிய வழி!

சிலர் நிறைய தண்ணீர் அருந்துவார்கள். அலுவலகத்திலும்கூட ஒரு தண்ணீர் நிறைந்த போத்தலை மேசையில் வைத்திருப்பார்கள். மேலும் சிலர் சாப்பிட்டுவிட்டு ஒரு கிளாஸ் தண்ணீர் அருந்துவதோடுசரி. வேறு நேரத்தில் தண்ணீரை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை.

ஒரு மனித உடம்பில் எழுபது சதவீத தண்ணீர்தான். இந்த அளவைத் தொடர்ந்து பேணிவர தினமும் குறைந்தபட்சம் மூன்று லீற்றர் தண்ணீராவது அருந்த வேண்டும். தண்ணீரைக் குறைவாக அருந்துபவர்களுக்கு பல சிக்கல்கள் ஏற்படும். மூட்டுகளில் தண்ணீர் கட்டிவிடும். உடல் பருமன் குறையாது. கொழுப்பு வைத்துவிடும். தசை வளர்ச்சி நன்றாக அமையாது. சமிபாட்டு வேகம் குறைந்துவிடும். உணவு சக்தியாக மாறும் தொழில் மெதுவாகவே நடைபெறும். உடலில் நச்சுப் பொருட்கள் தங்கும். உடல் அவயங்களின் இயக்கம் முறையாக நடக்காது.

குறைவாக தண்ணீர் குடிக்கும்போது தண்ணீரை வெளிவிடாது உடல் தன்னிடத்தில் தண்ணீரைத் தக்கவைத்துக் கொள்ள முயற்சிப்பதன் விளைவாகவே மூட்டுகளில் நீர்கட்டி விடுகிறது. உடல் இயக்கத்துக்கு தண்ணீர் மிக அவசியம்.

மூச்சுவிடுவதன் மூலம் மட்டும் தினசரி அரைபோத்தல் தண்ணீர் வெளியேறுகின்றது. சிறுநீரகம் யூரியாவையும் யூரிக் அசிட்டையும் வெளியேற்றுவதற்கு நிறைய தண்ணீர் தேவை.

இல்லையேல் சிறுநீரகத்தினால் கழிவுகளை வெளியேற்றுவதில் தாமதம் ஏற்பட்டு வேறு தொல்லைகளை எதிர்நோக்க வேண்டிவரும். சிறு நீரகத்தில் கற்கள் உருவாகும். உணவு சக்தியாக மாறுவதற்கும் சமிபாட்டின் போது இரசாயன மாற்றங்கள் ஏற்படுவதற்கும் தண்ணீர் மிகவும் அவசியம்.

உடலை குளிர்ச்சியாகப் பேணுவதற்கும், மூட்டுகளை சுலபமாக இயங்கச் செய்யவும், பிராணவாயுவை உடலெங்கும் எடுத்துச் செல்லவும் தண்ணீர் அவசியம். நமது நுரையீரல்கள் எப்போதும் ஈரலிப்பானதாக இருக்க வேண்டும். பிராணவாயுவை உள்ளிழுக்கவும் கரியமிலவாயுவை வெளியேற்றவும் தண்ணீர் இன்றியமையாதது.

நிறைய தண்ணீர் அருந்துபவர்களின் உடல் கண்டபடி சதை போடாது. அதிக தண்ணீர் அருந்தும்போது அடிக்கடி பாத்ரூம் போக வேண்டி வருமோ எனச் சிலருக்கு சந்தேகம் வரலாம். ஆரம்பத்தில் அப்படித்தான். பின்னர் சிறுநீரகம் தன்னை ஒழுங்கமைத்துக் கொண்டதும் அடிக்கடி சிறுநீர் பிரியாது.

ஆனால், தண்ணீர் குடிக்கிறேன் என்று குளிர்பானங்களை நாடக்கூடாது. இளநீர் விதிவிலக்கு.

ஆனாலும், சுத்தமான நீரை தினசரி அடிப்படையில் அடிக்கடி அருந்துவதே, ஆரோக்கிய வாழ்க்கைக்கான ஒரே எளிய வழி!

### சிறிலங்கா அரசு - விடுதலைப் புலிகள்

# அமைதிப் பேச்சை மீண்டும் ஆரம்பிக்க இந்தியா முயற்சிக்கவில்லை

### இந்திய வெளியுறவுத்துறை இணை அமைச்சர்

(புதுடில்லி)

**இலங்கையின் சமாதான நடவடிக்கையில் இந்தியா தலையிடாது என இந்திய வெளியுறவுத்துறை இணையமைச்சர் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.**

மக்களவையில் நேற்று முன்தினம் கேள்வி ஒன்றிற்கு பதிலளித்தபோதே வெளியுறவுத்துறை இணையமைச்சர் திக் விஜய்சிங் இவ்வாறு தெரிவித்துள்ளார். இலங்கை அமைதிப் பேச்சுவார்த்தையை மீண்டும் தொடக்குவதற்கான முயற்சியில் இந்தியா ஈடுபடவில்லை. அமைதிப் பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்குவது குறித்து நோர்வே முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றது. இதில் இந்தியா தலையிடாது. இருப்பினும் அமைதி முயற் சியில் இலங்கை அரசுதான் நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர இந்தியா எந்த நிலையிலும் தலையிடாது என்றும் திக் விஜய் சிங் கூறியுள்ளார்.

# சண்டிலிப்பாய், மானிப்பாய் பகுதியில் நிலைகளைப் பலப்படுத்தும் பணியில் படையினர்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் மற்றும் மானிப்பாய் பகுதிகளிலுள்ள காவலரண்கள் பலப்படுத்தும் நடவடிக்கைகளில் படையினர் கடந்த சில நாட்களாக ஈடுபட்டு வருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

அத்துடன் புதிய புதிய முட்கம்பி வேலிகளையும் அமைத்து வருவதுடன் இப்பகுதியைச் சேர்ந்த மினி முகாம்களைச் சூழ நெருக்கமான முட்கம்பி வேலிகள் அமைக்கப்பட்டு வருவதுடன் படையினர் என்றும் இல்லாதவாறு பயிற்சிகளிலும், விசேடமான காவல் கடமைகளிலும் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (33)

## விமானப்படை பேச்சாளர் ஓய்வு

(கொழும்பு)

சிறிலங்கா விமானப்படைத் தலைமையகத்தின் பேச்சாளர் விங் கமாண்டர் அஜித் விஜய சுந்தர சேவையிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார்.

கடந்த மூன்று வருடகாலமாக விமானப்படை தலைமையகத்தின் பேச்சாளராகப் பணியாற்றிய இவர் ஊடகங்களுக்கு விமானப்படை சம்பந்தமான செய்திகளை வழங்கி வந்தார்.

இவர் ஓய்வுபெற்றதையடுத்து இவரது இடத்திற்கு விங்கமாண்டர் அஜந்த சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

### திருமலை – செவநாயகபுரம் இந்து மகா. வித்.

## அதிபர் உள்ளிட்ட இருவர் நிதி மோசடி குறித்து இடைநிறுத்தும்

திருகோணமலை செவநாயகபுரம் இந்து மகா வித்தியாலய அதிபர் மற்றும் அதிகாரி ஒருவரும் அங்கு இடம்பெற்ற நிதி மோசடி தொடர்பாக பொறுப்புக்களிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாக வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இப்பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினூடாக இடம்பெற்றதாகக் கூறப்படும் 47 இலட்சம் ரூபா மோசடி குறித்த விசாரணை சீ.ஐ.டியினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாண கணக்காய்வுத் திணைக்களத்தின் பிரதிச் செயலாளர் கலாநிதி கே.தியாக ராஜாவினால் சமர்ப்பிக்கப்பட்ட ஐந்து பக்க கணக்காய்வு அறிக்கையின் மூலம் இந்த நிதி மோசடி அம் பலத்திற்கு வந்துள்ளதாகத் திருகோணமலை கல்வித் திணைக்கள செய்திகள் தெரிவிக்கின்றன.

# தென்மராட்சி–உசன் கிணற்றிலிருந்து பெருமளவு வெடிபொருட்கள் மீட்பு

(தென்மராட்சி)

தென்மராட்சி மிருசுவில், உசன் பகுதியில் கிணற்றிலிருந்து பெருமளவான வெடி பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

கிணற்றினை இறைத்து சுத்தம் செய்தவேளையிலேயே கொள்கலன்களில் இடப்பட்ட நிலையில் இவ்வெடி பொருட்கள் எடுக்கப்பட்டுள்ளன.

இவ்வீட்டிலிருந்த படையினர் அண்மையிலேயே வெளியேறியிருந்தமையால் இவ்வெடி பொருட்களை அவர்களே போட்டிருக்கலாம் என நம்பகப்படுகின்றது.

மீட்கப்பட்ட வெடிபொருட்களில் ஆட்லறி குண்டுகள் மற்றும் மோட்டார் குண்டுகள், கைக்குண்டுகள் என்பன இருந்ததாகத் தெரிய வருகின்றது. (27)

## திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுவரும் பிரிட்டனைச்சேர்ந்த 'ஹலோரஸ்ட்' நிறுவனத்தின் அலுவலகத்தில் இருந்து ஆறு தொலைத் தொடர்புக் கருவிகள் களவாடப்பட்டுள்ளது. இது குறித்து இந்நிறுவனத்தின் காவலாளிகள் இருவர் யாழ்ப்பாணம் பொலிசில் முறைப்பாடு செய்துள்ளனர். கடந்த இரு மாதங்களுக்கு முன்பும் இந்நிறுவன அதிகாரிகள் தங்கியிருக்கும் வாசஸ்தலத்தில் திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றதாகவும் கூறப்படுகிறது.

# கல்வி அபிவிருத்தி, ஆராட்சிக்குமான வள நிலையம் நிறுவப்படவேண்டும்

### - விரிவுரையாளர் க. சின்னத்தம்பி

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் ஜீ. சீ.ஈ. சாதாரணதர, உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளில் காணப்படும். பின்னடைவுகளை சீராக்குவதற்கும் உயர்மட்ட அடைவுகளைப் பெறுவதற்கும் கல்வி அபிவிருத்தி மற்றும் ஆராட்சிக்குமான நிலையம் நிறுவப்பட வேண்டும்.

அண்மையில் வேலணையில் நடைபெற்ற கல்வி வள நிலையத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கிய யாழ். பல்லைக்கழக கல்வியியல் பீடத்தைச் சேர்ந்த விரிவுரையாளர் கலாநிதி க. சின்னத்தம்பி இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், அதிகாரிகள், அதிபர்கள் கலந்து கொண்டனர். கலந்துரையாடலில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

பிரச்சினைகள் இனங்காணப்பட வேண்டும். அவற்றை முன்மொழிவதற்கும் திட்டங்களை பொருத்தமான முறையில் வடிவமைப்பதற்கும் இத்தகைய ஓர் அமைப்பு அவசியம் தேவை. சர்வதேச உதவியும் பொது நிறுவனங்களின் ஆர்வமும் இருக்கின்ற இந்த நேரத்தில் பின் தங்கிய பாடசாலைகளை பாடசாலை மட்ட 'பயிற்சி மூலம் கல்வி அபிவிருத்தி என்ற வெளிச்சத்திற்குக் கொண்டு வரவேண்டும். இந்த நிலையம் ஆசிரியர் வள நிலையங்களுடன் சேர்ந்து இயங்க முடியும்.

குடாநாட்டில் பல பாடசாலைகள் பின்தங்கிய நிலையில் இருக்கின்றன. இவ் ஏற்றத் தாழ்வுகள் நீக்கப்பட வேண்டும். இப்பாடசாலைகளின் பலவீனத்தை பலமாக மாற்றி அமைக்க இந்த நிலையம் உதவும். கல்வி தீர்மானத்தை திட்டமிட்டே வடிவமைகக்க வேண்டும.

# தென்மராட்சியில் 1000 ஏக்கர் வயல் நெற் செய்கைக்கு அனுமதி

தென்மராட்சியில் அதியுயர் பாதுகாப்புப் பகுதியில் அமைந்துள்ள சுமார் 1000 ஏக்கர் வயல் பிரதேசத்தில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

சாவகச்சேரி தனங்களப்பு வீதியின் மேற்காகவும், நாவற்குழி கேரதீவு வீதியின் வடக்காகவும் மற்றும் புகையிரதப் பாதையின் தெற்குப் பகுதிகளிலும் வீதிகளிலிருந்து 100 மீற்றர் தூரத்திற்கு அப்பால் உள்ள பகுதிகளிலேயே விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள படையினர் தற்போது அனுமதித்துள்ளனர். (27)

# எட்டுப் போராளிகளிற்கு விளக்கமறியல் நீடிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சிறைச்சாலையில் கடந்த 14ஆம் திகதி முதல் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள எட்டுப் போராளிகளின் விளக்க மறியல் நேற்று முன்தினம் முதல் மேலும் இரு வாரங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது. கைக்குண்டுகளும், துப்பாக்கி ரவைகளும் வைத்திருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்பது தெரிந்ததே.

### - வடக்கு தொழிற்பயிற்சி நிலையத்தின் -

# சிறப்புப் பயிற்சி வகுப்பின் நிறைவு விழாவும் கண்காட்சியும்

சமுதாய முன்னேற்ற நிலையத்தினால் வடக்கு தொழிற்பயிற்சி நிலையத்தின் பெண்கள் தொழிற்பயிற்சி நிலையம் நடாத்திய சிறப்புப் பயிற்சி வகுப்பின் நிறைவுவிழாவும் கண்காட்சியும் நேற்று கிளிநொச்சி-ஜெயந்தி நகரில் நடைபெற்றது.

இதில் பயிற்சி பெற்றவர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் கரைச்சிப்பிரதேச செயலர் பொன். நித்தியானந்தன் மற்றும் பொறுப்பாளர்கள், ஆசிரியர்கள் சான்றிதழ்களை வழங்கிக் கௌரவித்தனர்.



இந்நிகழ்வில் முன்னதாக மங்கல விளக்கினை நிறுவன உபதலைவர் கோ.இராமநாதன் ஏற்றிவைக்க, தேசியக்கொடியினை அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் ஏற்றிவைத்தார். மாணவி வதனி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சிறப்புரைகளைத் தொடர்ந்து கலைநிகழ்வுகள் இடம்பெற்றன.

இப்பயிற்சி நிலையத்தில் தையல், ஐசிங், சிகைஅலங்காரம், திரை அச்சுப்பதிப்பு, தட்டச்சு, கட்டட அலங்காரப்பொருட்கள், காளான்உற்பத்தி, தையல் இயந்திரம் திருத்துதல் போன்ற பயிற்சி நெறிகள் நடைபெற்றுவருவது தெரிந்ததே.

### - முல்லைத்தீவு ம.வி.யில் -

# கடும் மழை காரணமாக பரீட்சை நடத்துவதில் சிரமம்

(முல்லைத்தீவு)

நேற்றுப் பெய்த கடும் மழை காரணமாக முல்லைத் தீவு மகாவித்தி யாலயத்தில் தவணைப் பரீட்சை நடத்த முடியாத நிலை ஏற்பட்ட தாக பாடசாலை அதிபர் தெரிவித் தார்.

ஆண்டு 7,8 ஆகிய வகுப்புகளுக்கு ஆலமர நிழலிலேயே பரீட்சைகள் நடைபெற்று வந்தன. கட்டடங்களின் கூரையிலிருந்து மழைநீர் ஒழுகியதால் மாணவர்கள் குடைகளைப் பிடித்தவாறே பரீட்சை எழுத வேண்டியநிலை. இதனால் அவர்களும் பெரும் சிரமங்களை அனுபவித்தனர். 6ஆம், 7ஏ வகுப்பு மாணவர்கள் தரையிலிருந்து பரீட்சை எழுதினர். இவர்கள் நிலத்தில் சிந்திய நீரினால் சிரமமுற்றனர்.

நிக்கொட் நிறுவனத்தால் 90 இலட்சம் ரூபா கட்டடத்திற்கென ஒதுக்கப்பட்டபோது இதுவரை கட்டடம் கட்டவரும் முன்வரவில்லை என முல்லைத்தீவு மகாவித்தியாலய அதிபர் ம.அனரனி ஜெகநாதன் தெரிவித்தார். (20)

# ஜோன் வெஸ்பேர்க் நோர்வே திரும்பினார்

சிறிலங்காவிற்கான முன்னாள் நோர்வே தூதுவரும் தற்போதைய விசேட தூதுவருமான ஜோன் வெஸ்பேர்க் கடந்த செவ்வாய்கிழமை நோர்வே சென்றுள்ளார். கடந்த மூன்று வாரகாலத்திற்கு மேலாக இலங்கையில் தங்கியிருந்து வடக்கு கிழக்கு இடைக்கால நிர்வாக திட்டவரைவுகுறித்து பலதரப்பினரையும் சந்தித்து நடவடிககைகளை மேற்கொண்டு வந்த இவர் தற்போது நாடு திரும்பியுள்ளார்.ஒரு சில வாரங்களில் இவர் மீண்டும் இலங்கைக்கு வருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதேவேளை, நோர்வே திரும்பியுள்ள இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் கடந்த திங்கட்கிழமை கொழும்பு திரும்பியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

### – உடத்தலவின்னப் படுகொலை –

# கோல்லப்பட்டோரின் குடும்பத்தினருக்கு காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன

(கொழும்பு)

கடந்த பொதுத் தேர்தல் தினத்தன்று கண்டி-உடத்தலவின்னப் பகுதியில் கொல்லப்பட்ட பத்து முஸ்லிம் இளைஞர்களின் குடும்பங்களுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க காணிகளை வழங்கியுள்ளார்.

பல்லேகல பகுதியில் இவர்களுக்கான காணிகள் வழங்கப்பட்டுள்ளன.

ரத்வத்தவின் புதல்வர்கள் தலைமையிலான குழுவினரால் 10 முஸ்லிம் இளைஞர்கள் உடத்தலவின்னயில் கொல்லப்பட்டிருந்ததும், இது தொடர்பான வழக்கு விசாரணை கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நடைபெற்று வருவதும் தெரிந்ததே.

### – கடந்த வார தேடுதலில் –

# இராணுவத்திலிருந்து தப்பிச் சென்ற 1700 பேர் போலிசாரால் கைது

(கொழும்பு)

நாடு முழுவதிலும் கடந்த வாரம் நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையில் இராணுவத்திலிருந்து தப்பிச்சென்ற 1700 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக குற்றப்புலனாய்வுப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் பல்வேறு கொள்ளை மற்றும் கொலைகளுடன் சம்பந்தப்பட்ட 63 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளதாக மேலும் அவர்கள் கூறியுள்ளனர்.

## உள்நாட்டலுவல்கள் மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சு
## வடக்கு கிழக்கு மாகாண சபை
## வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித்திட்டம் (NECORD)
## ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
## "ஆஅவ" கடன் இல.1846 - SRI(SF)

# கேள்வி அறிவித்தல்-20

01. வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் (NECORD) ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கட்டட நிர்மாண வேலைகளுக்காக இந்தக் கடனின் ஒரு பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. இதன் பின்னகத்து தொழில் தருனராகக் குறிப்பிடப்படும் NECORD, கருத்திட்டக் கேள்விச் சபையின் தலைவர் கருத்திட்டத்தின் கீழ் பின்வரும் ஒப்பந்தங்களுக்குத் தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கோருகின்றார்.

அட்டவணை

| இல | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக் குறைந்த ICTAD பதிவு | கூறுவிலை பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | JF/NECORD/RD/01 | வடமராட்சி கிழக்குப் பகுதி செம்பியன்பற்று வடக்கு-கிழக்கு கட்டக்காடு 19.19 கிலோமீற்றர் மீன்பிடி வீதி சீரமைத்தல் (தொகுதி1) | M6 | 53,000 |
| | | வடமராட்சி கிழக்கு பகுதி செம்பியன்பற்று வடக்கு - கட்டக்காடு 19.19 கிலோமீற்றர் மீன்பிடி வீதி சீரமைத்தல் (தொகுதி2) | M7 | 48,000 |
| | | வடமராட்சி கிழக்கு பகுதி செம்பியன்பற்று வடக்கு - கட்டக்காடு 19.19 கிலோமீற்றர் மீன்பிடி வீதி சீரமைத்தல் (தொகுதி3) | M7 | 43,000 |
| 02 | MN/NECORD/IR/01 | மன்னார் மாவட்டத்தில் கட்டுக்கரைக்குளம் சின்ன உடைப்பு பிரதான கால்வாய் புனர் நிர்மாணம் (தொகுதி1) | M6 | 61,000 |
| | | மன்னார் மாவட்டத்தில் கட்டுக்கரைக்குளம் சின்ன உடைப்பு பிரதான கால்வாய் புனர் நிர்மாணம் (தொகுதி2) | M6 | 57,000 |
| | | மன்னார் மாவட்டத்தில் கட்டுக்கரைக்குளம் சின்ன உடைப்பு பிரதான கால்வாய் புனர் நிர்மாணம் (தொகுதி3) | M7 | 23,000 |
| 03 | VA/NECORD/HS/08 | வவுனியா 48 கட்டில்கள் கொண்ட வாட்டுடன் துணைவைத்தியசாலை அமைத்தல் | M8 | 85,000 |
| 04 | AM/NECORD/IR/01 | அம்பாறை மாவட்ட சடயந்தலாவை நீர்ப்பாசனத்திட்ட புனரமைப்பு-(தொகுதி2) வாய்க்கால் அமைப்பு | M8 | 58,000 |
| 05 | AM/NECORD/IR/02 | அம்பாறை மாவட்ட கஞ்சிகுடிச்ச ஆறு நீர்ப்பாசனத் திட்டம் புனரமைப்பு - தொகுதி2 வாய்க்கால் அமைப்பு | M7 | 46,000 |
| | | அம்பாறை மாவட்ட கஞ்சிகுடிச்ச ஆறு நீர்ப்பாசனத் திட்டம் புனரமைப்பு - தொகுதி3 வாய்க்கால் அமைப்பு | M7 | 34,000 |
| | | அம்பாறை மாவட்ட கஞ்சிகுடிச்ச ஆறு நீர்ப்பாசனத் திட்டம் புனரமைப்பு - தொகுதி4 வாய்க்கால் அமைப்பு | M7 | 33,000 |
| | | அம்பாறை மாவட்ட கஞ்சிகுடிச்ச ஆறு நீர்ப்பாசனத் திட்டம் புனரமைப்பு - தொகுதி4 வாய்க்கால் அமைப்பு | M7 | 30,000 |

03. பின்வரும் தகுதிகளைக்கொண்டுள்ள உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.
   I. நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரம் ஒன்றில் ஒப்பந்தகாரர்பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
   II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர்கள் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச.) உறுப்பினராக (ICTAD உடன் மேற்படி M7 க்கு மேலே பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) இருக்க வேண்டும்.
   III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன், கடந்த ஐந்து வருடங்களின் போது மேற்கொள்ளப்பட்ட வேலையில் செய்யப்பட்ட திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும், இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன்/அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் ஆதரவளிக்கப்பட வேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்றை வழங்குமாறு கூறுவிலையிடுவோர் வேண்டப்படுகின்றனர்.
   IV. இக்டாட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கேள்விகோரும் ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.
   V. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு, அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.
   VI. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்த காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.

04. மேற்படி பந்தி 2இல் உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பகுதிகளுக்கு கேள்வி கோரலாம். ஒவ்வொரு ஒப்பந்த விடயமும் புறம்பான கேள்வியாக அமையவேண்டும். ஏதேனும் ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை நிகொட் திட்டத்தின் கீழ் நடைமுறையிலிருக்கும் ஒப்பந்தம் உட்பட மூன்றாகும்.

05. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை கேள்விப்படிவத்திலிருந்து பெறமுடியும் என்பதுடன், கேள்வி ஆவணங்களை வடக்கு கிழக்கு சமூக மீளமைப்பு அபிவிருத்தித்திட்டம் (NECORD), 140, மின்சார நிலைய வீதி, திருகோணமலை என்ற விலாசத்திலுள்ள திட்டப்பணிப்பாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

06. கேள்வி ஆவணங்களை 31.07.2003 இலிருந்து 13.08.2003 வரை காலை 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 மணி வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து இது தொடர்பாக மீளளிக்கப்படாத கட்டணம் ரூ.1000 த்தை (கேள்வி ஆவணம் ஒன்றுக்கு) செலுத்தி கொள்வனவு செய்துகொள்ளலாம்.

07. கேள்விகோருவோர் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும், இரு முத்திரையிடப்பட்ட உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட விலையிடப்பட்ட கேள்விகளையும் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன், இதன் தொடர்பாக பந்தி 08 இல் குறிப்பிட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.

08. மொறிவைத்த கேள்விகள் தலைவர், திட்ட கேள்விச்சபை, NECORD, 140, மின்சார நிலையவீதி, திருகோணமலைக்கு 18.08.2003 மாலை 2.00 மணிக்கு முன்பாகக் கிடைக்க வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விகோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

09. முன்கூட்டியே கேள்விகோருவோர் கூட்டமொன்று 11.08.2003 அன்று மாலை 2.00 மணிக்கு எமது அலுவலகத்தில் நடைபெறும்.

10. கேள்விகளின் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்வி கோருவோருக்கும் ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருனர் பொறுப்பாக விளங்கமாட்டார்.

த.லங்காநேசன்,
வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு
அபிவிருத்தித்திட்ட கேள்விச் சபைத் தலைவர்,
140, மின்சார நிலைய வீதி,
திருகோணமலை.

(சி-8449)

## சிந்தனைக்கு



எதிரியைவிட துரோகிகளே ஆபத்தானவர்கள்.

தமிழீழத்தேசியத் தலைவர்

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 02-08-2003

# இனத்துரோகம் தொடரும்

ஏனைய தமிழ்க்கட்சிகளைக் கலந்தாலோசிக்காது விடுதலைப் புலிகளுடன் வடக்கு-கிழக்கு நிர்வாகம் குறித்துப் பேச்சுவார்த்தைகள் நடாத்துவதற்காக சிறிலங்கா அரசாங்கத்திற்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக ஈ.பி.டி.பி. விடுத்துள்ள 'எச்சரிக்கையானது' இனத்துரோக நடவடிக்கையை மேலும் தொடரப்போவதாக ஈ.பி.டி.பி. விடுத்த அறிவிப்பாகவே கொள்ளத்தக்கதாகும்.

இனப்பிரச்சினைக்கான அரசியற்தீர்வு விடயம் தொடர்பாக பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பாக இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு உருவாக்கப்படுதல் வேண்டும் என்ற விடுதலைப்புலிகளின் கோரிக்கைக்கு இன்று சர்வதேச அங்கீகாரமும் கிடைக்கப்பெற்றுள்ளது. இதற்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றைச் சிறிலங்கா அரசாங்கம் உருவாக்க வேண்டும் எனச் சர்வதேச நாடுகள் - குறிப்பாகச் சிறிலங்கா அரசிற்கு உதவி வழங்கும் நாடுகள் அழுத்தம் கொடுப்பதே எடுத்துக்காட்டாகும்.

இந்நிலையில், ஈ.பி.டி.பி., அரசாங்கத்திற்கு விடுத்துள்ள எச்சரிக்கையானது, எத்தனை தூரம் பலமானது, அரசாங்கத்திற்கு இதனால் இடையூறு விளையுமா என்பதெல்லாம்ஒருபுறம் இருக்க, இடைக்கால நிர்வாகம் ஒன்று தமிழர் கைகளில் சென்று சேர்ந்துவிடக் கூடாது என்பதில் இவ் இனவிரோதக்குழு எத்தகைய முனைப்புடன் உள்ளது என்பதையே இது வெளிப்படுத்துவதாய் உள்ளது.

இடைக்கால நிர்வாகம் ஒன்று தமிழருக்கு வழங்கப்பட வேண்டுமானால், விடுதலைப்புலிகள் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் என்ற ஈ.பி.டி.பி.யின் கோரிக்கையானது - இதற்கு யார் செவிசாய்க்கப்போகின்றார்கள் என்பது வேறு விடயம் - இன்று சிங்கள ஆட்சியாளர்களினாலேயே கைவிடப்பட்டதொன்றாகும். இன்று இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்து விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்கத் தயாராக உள்ள ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் இது குறித்து எவ்வேளையிலும் பேசியதாக இல்லை.

அது மாத்திரமல்ல, விடுதலைப் புலிகளும், சிறிலங்கா அரசும் உடனடியாகப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும் எனக் கோரிவரும் அமெரிக்கா உட்பட்ட மேற்குலக நாடுகள்கூட இது குறித்துப் பேசியதாக இல்லை. அமெரிக்கா ஒரு தடவை புலிகளின் ஆயுதங்கள் குறித்துப்பேச முற்பட்டதாயினும் பின்னர் அது குறித்துப் பேசுவதை அது நிறுத்திக் கொண்டது.

இதற்கும் அப்பால், இன்று விடுதலைப்புலிகளுக்கும் - சிறிலங்கா அரசிற்கும் இடையிலான இராணுவச் சமநிலையே இனப்பிரச்சினைத் தீர்விற்கான சமாதானப் பேச்சுவார்த்தையின் அடித்தளமாகவுள்ளது என்பதையும் உலகம் புரிந்துகொண்டுள்ளது. இவ் இராணுவச் சமநிலையைப் பேணுதல் வேண்டும் என்பதில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுகூட மிகவும் அக்கறையாகவுள்ளமைக்கு இதன்காரணமாகவேயாகும்.

இதற்கும் அப்பால், விடுதலைப்புலிகளின் கைகளில் ஆயுதங்கள் இருக்கும் வரையில் தான் சிறிலங்கா அரசாங்கம் தமிழ் மக்களின் உரிமைகள் குறித்துப் பேசுவதற்குத் தயாராக இருக்கும் என்பதே யதார்த்தமானதாகும். புலிகள் இயக்கத்தின் கைகளில் ஆயுதம் இல்லாதுபோனால், தமிழ் மக்களின் உரிமைகள் குறித்து சிறிலங்கா ஆட்சியாளர்கள் பேசப் போவதில்லை. பேசினும் உரிமைகள் எதையும் வழங்கப்போவதில்லை. தேர்தல் விஞ்ஞாபனங்களில் சில வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டாலும் அது அமுலாக்கம் பெறப்போவதில்லை.

இவை எதிர்வு கூறல்கள் அல்ல. கடந்த கால வரலாற்றுப் படிப்பினையாகும். இவற்றைத் தெரிந்துகொண்டிருந்தும் ஈ.பி.டி.பி. விடுதலைப்புலிகளின் ஆயுதங்கள் ஒப்படைக்கப்படவேண்டும் எனக் கோருவதானது, தமது சுயநலத்திற்காக தமிழினத்தைப் பலவீனப்படுத்துவதை அவர்கள் இன்னமும் தொடரப் போகின்றார்கள் என்பதற்கான முன்னறிவிப்பே ஆகும்.

விடுதலைப்புலிகளின் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் எனக் கோரும் இவர்கள் 'சனநாயக வழிக்குத் திரும்பி' தமது வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொண்டதைத் தவிர தமிழ் மக்களின் உரிமைகள் எதையும்பெற்றுக் கொடுத்தவர்கள் அல்லர். அது மட்டுமல்ல, தமிழ் மக்களின் உரிமைகள் குறித்து சிறிலங்கா அரசாங்கங்கள் இவர்களுடன் எதையும் பேச விளைந்ததும் இல்லை. சில சமயங்களில் சில சந்திப்புக்கள் இடம்பெற்றிருப்பினும், இவர்களால் எதுவும் கோரிப்பெற முடியவில்லை. அன்றி அரசாங்கம் கூடத் தானாக எதையும் வழங்கவில்லை இவ்வாறு எதுவும் நடைபெறாமைக்குக் காரணம் உண்டு. அதாவது, தமிழ் மக்களின் உரிமைகள் குறித்து இவர்களுடன் பேச வேண்டிய தேவை இல்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியும்.

ஏனெனில், இவர்கள் தமிழர் தாயகப் பகுதியில், சிங்கள ஆட்சியாளர்கள் பெரும் படை எடுப்புக்களை நடாத்திக் கொண்டிருந்தவேளை மோசடி மூலம் கிடைக்கப்பெற்ற பாராளுமன்ற ஆசனங்களை வைத்துக்கொண்டு அதற்கு ஆதரவு வழங்கியவர்கள் தமிழ் மக்கள் படுகொலைக்கு உள்ளாக்கப்பட்ட வேளையிலும், பல்லாயிரக்கணக்கில் அகதிகளாக அல்லல்பட்டபோதும் சுகபோக வாழ்விற்கான இனத்துரோகிகளாக செயற்பட்டவர்கள் என்பது அவர்களுக்குத் தெரியும். இவர்களுக்குத் தேவை தமிழ் மக்களின் உரிமைகள் அல்ல, எலும்புத்துண்டுகள் என்பதும் அவர்களுக்குப் புரியும்.

ஆனால், தற்பொழுது இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்து எழும் பேச்சுக்கள் இவ் இனத்துரோகிகளுக்கு அச்சத்தை ஊட்டுவதாகியுள்ளது. தமிழ் மக்களின் பெயரில் தாம் அனுபவித்தமை மக்களுக்கே சென்று சேர்ந்துவிடுமோ என்பதே அவர்களின் அச்சத்திற்குரிய காரணமாகும். இதனால், அத்தகையதொரு சூழ்நிலை உருவாகாது தடுத்து நிறுத்த அதற்கு எதிரான பேரினவாத சக்திகளுடன் சேர்ந்து கொண்டு மேலும், மேலும் காட்டிக்கொடுப்பிற்கு இவ் இனத்துரோகிகள் தயாராகி வருகின்றனர். இதற்கு மோசடி மூலம் கிடைக்கப்பெற்ற ஓரிரண்டு பாராளுமன்ற ஆசனங்களைப் பயன்படுத்திக் கொள்ள முற்படுகின்றனர்.

- சிறிலங்கா பாராளுமன்றத்தில் -

# எம்.பி.க்களின் சலுகைகளால் எழும் பாதுகாப்புப் பிரச்சினைபற்றி ஆய்வு

## - பொலிஸ்மா அதிபரை அழைக்க சபாநாயகர் முடிவு

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் அவ்வப்போது ஏற்படும் அமளியின்போது எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயவென பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜாவை அழைப்பது பற்றி சபாநாயகர் தீர்மானித்துள்ளார்.

எம்.பி.க்களுக்கு கிடைக்கப்பட்ட விசேட சலுகைகள் தொடர்பாக சபையில் சில வேளைகளில் கருத்து மோதல் ஏற்படுவதுண்டு இதனால் சபையில் கூச்சலும் குழப்பமும் ஏற்படுவது வழக்கமாகிறது. இதன்போது எடுக்கப்படவேண்டிய பொதுவான பாதுகாப்பு நடவடிக்கைகள் இருப்பதாக பொலிஸ்மா அதிபர் ஏற்கனவே அறிவித்துள்ளதை இக்கூட்டத்தின்போது ஆராயப்படும்.

கடந்த காலங்களில் பாராளுமன்றுக்கு சவப்பெட்டி, மலர்வளையம் என்பவற்றை எடுத்துவந்தமை, எம்.பி.க்களின் மேசைலாச்சுகளை சோதனையிட்டமை போன்ற செயல்கள் பற்றியும் விரிவாக ஆராயப்படுவதற்காக பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட பாதுகாப்புப் பிரிவினரை அழைக்க சபாநாயகர் தீர்மானித்துள்ளார். எம்.பி.க்கள் என்ற வகையில் அவர்களால் மேற்கொள்ளப்படும் குற்றச்செயல்கள் பற்றி மேலும் நடவடிக்கை எடுக்க பொலிசார் தயங்குவது பற்றியும் இக்கூட்டத்தில் ஆராயப்படும் எனவும் சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

# இடைக்கால நிர்வாக வரைவு குறித்து அமைச்சரவையில் ஆராய்வு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கிற்கான இடைக்கால நிர்வாக யோசனைத் திட்ட வரைவு குறித்து கடந்த புதன் கிழமை மாலை சனாதிபதி தலைமையிலான அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது.

அரசாங்கம் விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு நோர்வேயின் முன்னாள் தூதுவர் ஊடாக அனுப்பி வைத்த இடைக்கால நிர்வாக சபை திட்ட வரைவு முக்கியமல்ல. ஆனால் இறுதி யோசனைகள் கட்டாயம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று சனாதிபதி அங்கு கூறியுள்ளார்.

இது தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் சார்பில் விளக்கமளித்துள்ளார்.

இந்த அமைச்சரவைக் கூட்டம் சுமுகமாக நடைபெற்றதாக அமைச்சர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள். இந்த அமைச்சரவைக் கூட்டம் முடிவடைந்த பின்னர் சனாதிபதியும், பிரதமரும் தனிப்பட்ட முறையில் சிறிது நேரம் உரையாடினர்.

# புலிகளின் நிலைப்பாடு வெளியான பின்பே எமது திட்டத்தைச் சமர்ப்பிப்போம்

## - இடைக்கால நிர்வாகம் தொடர்பாக மு.கா.

(கொழும்பு)

இடைக்கால நிர்வாக சபை குறித்த அரசாங்கத்தின் யோசனைகளுக்கு விடுதலைப்புலிகள் தங்களது நிலைப்பாட்டினை அறிவித்த பின்னர் இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக முஸ்லிம் கள் சார்பான திட்டத்தை சமர்ப்பிக்க தாம் உத்தேசித்திருப்பதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

இடைக்கால நிர்வாக சபை குறித்த முஸ்லிம்களின் நிலைப்பாடு குறித்தும் முஸ்லிம்களின் சார்பிலான திட்டம் தொடர்பாகவும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை புதன்கிழமை மாலை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் இந்தச் சந்திப்பின் போது குறிப்பிட்ட விடயங்கள் குறித்து சனாதிபதிக்கு எடுத்துக் கூறியதாகவும் முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த விடயம் தொடர்பாக மீண்டும் சனாதிபதியைச் சந்தித்துப் பேசவும் முஸ்லிம் காங்கிரஸ் முடிவு செய்துள்ளது.

# மீனவரைத் தாக்கிய படை அதிகாரி விசாரணைக்கு சமுகமளிக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

காக்கைதீவு கடற்றொழிலாளி ஒருவரைத் தாக்கியது சம்பந்தமாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணைக்கு காக்கைத்தீவு படை முகாமிற்குப் பொறுப்பான கடற்படை அதிகாரி சமுகமளிக்கவில்லை.

கடந்த21.ஆம் திகதி காக்கைதீவு கடலுக்கு தொழிலிற்குச் சென்ற மீனவர் ஒருவரை அவரது அடையாள அட்டை அனுமதிப்பத்திரம் நீரில் நனைந்தமையினால் தொழிலுக்குச்செல்ல அனுமதிக்க முடியாதென்று கூறி படையதிகாரி அவரைத் தாக்கினார். இது சம்பந்தமாக மனித வுரிமை ஆணைக் குழுவில் செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பாக கடந்த 29.ஆம் திகதி இவ் ஆணைக்குழு விசாரணைக்கு சமுகமளிக்குமாறு தாக்கிய அதிகாரிக்கு அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது. ஆனால் அவர் உரிய நேரத்தில் சமுகமளிக்கவில்லை. தான் வராமைக்கான காரணத்தை கடிதம் மூலம் எழுதி சிப்பாய் ஒருவரிடம் அனுப்பியுள்ளார். இதனால் ஆணைக்குழு அதிகாரிகள் மாலைவரை நீண்ட நேரம் காத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனைத் தொடர்ந்து விசாரணைத் திகதி பிற்போடப்பட்டுள்ளது. (33)

# நாட்டில் மீண்டும் யுத்தம் ஏற்பட்டால் பாரிய அழிவுகள் ஏற்படும்

## - அமைச்சர் இம்தியாஸ் எச்சரிக்கை

(கொழும்பு)

உலகில் கெரில்லா யுத்தத்தில் அதிசக்திவாய்ந்த ஒரு அமைப்பாக விடுதலைப்புலிகளை இன்று உலகம் ஏற்றுள்ளது. இருபது வருடகாலமாக இலங்கையில் கெரில்லா யுத்தத்தில் ஈடுபட்ட ஒரு இயக்கத்தை இன்று சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு ஈடுபடுத்தியமை நினைத்துப்பார்க்க முடியாத மாபெரும் வெற்றியாகும் என சிறிலங்காவின் மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கிர்மக்கார் கூறியுள்ளார்.

சமாதானம் வெற்றி பெறுவதற்கு நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் பாடுபடவேண்டும். அது இந்த நாட்டின் குடிமகனின் கடமையாகும். இன்று நாட்டின் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசும் அதில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சி அமைச்சர்களும் பெரும் பொறுப்புக்கள் என்று அதனை இன்றுவரை விடுதலைப் புலிகள் தற்காலிகமாக சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடாமல் இருப் பது மிக கவலைக்குரிய விடயமாகும். அவர்கள் வெகு விரைவில் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதற்கு அரச தரப்பு சகல நடவடிக்கைகளும் மேற் கொண்டு வருகிறது. இவர்களின் யோசனைகள் நிராகரிக்கப்பட்டால் பாரிய விளைவுகளைச் சந்திக்க நேரிடும். நாட்டில் யுத்தம் ஏற்பட்டு மீண்டும் பாரிய அழிவுகள் உண்டு பண்ணும். இதனால் நாட்டு மக்கள் மீண்டும் யுத்தம் ஒன்று ஏற்படுவதை அனுமதிக்கமாட்டார்கள் ஆனபடியால் நாட்டில் வாழும் ஒவ்வொரு குடிமகனும் சமாதானத் திற்காக பாடுபடவேண்டும் என அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

# சிறிலங்கா கிரிக்கெட் சபை வாபஸ்

சார்ஜா,மொரோக்கா ஆகிய இடங்களில் நடைபெறும் 8 சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து இலங்கை வாபஸ் பெற்றுள்ளது. டபிள்யூ எஸ்.ஜி.நிம்பஸ் நிறுவனத்துடனான ஒப்பந்தப் பிரச்சினை தீர்க்கப்படும் வரை சார்ஜா மொரோக்கோ போட்டிகளில் பங்கு பற்றாதிருப்பதற்கு இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தீர்மானித்துள்ளது.

இவ்வாறு இலங்கை கிரிக்கெட் சபையின் செயலாளர் மொஹானன்டி சில்வா தெரிவித்துள்ளார். இலங்கையில் நடைபெறும் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளை வெளிநாடுகளில் ஒலிபரப்பும் உரிமையை டபிள்யூ எஸ்.ஜி.நிம்பஸ் நிறுவனம் பெற்றிருந்தது.

2000ஆம் ஆண்டில் கிரிக்கெட் சபையின் தலைவராக திலங்க சுமதிபால பதவிவகித்த காலத்தில் இதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

ஆனால் திலங்கசுமதிபால தலைமையிலான கிரிக்கெட் சபை நிர்வாகம் கலைக்கப்பட்ட பின்னர், நியமிக்கப்பட்ட இடைக்கால நிர்வாகக்குழு, மேற்படி ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட்டது. தாஜ் டெலிவிஷன் நிறுவனத் துடன் ஒப்பந்தம் செய்து கொண் டது.

டபிள்யூ.எஸ்.ஜி.நிம்பஸ் நிறுவனம் உரிய தவணையில் பணம் வழங்காமையே இதற்குக் காரணம் எனக் கூறப்பட்டது. தமது ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டமைக்கு ஆட்சேபம் தெரிவித்த நிம்பஸ் நிறுவனம் இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு எதிராக சிங்கப்பூர் நீதிமன்றம் வழக்குத் தொடுத்தது. சில மாதங்களுக்கு முன் இவ்வழக்கில் நிம்பஸ் நிறுவனத்துக்குச் சாதகமான தீர்ப்பு வழங்கப்பட்டது.

இதன்படி எதிர்வரும் செப்ரெம்பர் 25ஆம் திகதிக்கு முன்பாக ஒரு கோடி 10 இலட்சம் டொலர்களை (சுமார் 110 இலட்சம் கோடி ரூபா) நிம்பஸ் நிறுவனத்திற்கு வழங்குமாறு இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

# குரங்குப் பாஞ்சான் குள முகாம் திருமலை துறைமுகத்துக்கு அச்சுறுத்தல்

## போ.ஐ.மு.பேச்சாளர் சரத் அமுனுகம கூறுகிறார்

கிண்ணியா குரங்குப் பாஞ்சான் குளமுகாம் திருகோணமலை துறைமுகம் மற்றும் இராணுவ முகாம்களுக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடியதொலைவிலேயே அமைந்துள்ளதாக பொதுசனஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவித்தார். நேற்று கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே இவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், கிண்ணியா குரங்குப்பாஞ்சான் குள முகாம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துவரும் முரணான தகவல்கள் நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையும் வகையில் உள்ளன என்றும் பொதுசன ஐக்கிய முன்னணி கூறுகின்றது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கிண்ணியா முகாம் அரசாங்க கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் தற்போது அதற்கு முரணான தகவல்களே வெளிவருவதாகவும் அந்த அமைப்பின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

சர்ச்சைக்குரிய குரங்குப்பாஞ்சான் குளமுகாம்திருகோணமலை துறைமுகம் மற்றும் இராணுவ முகாம்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடிய தொலைவிலே அமைந்துள்ளன. இதேவேளை இடைக்கால நிர்வாகம் தொடர்பாக அரசாங்கம் முன்வைத்த யோசனைகளை நோர்வேயின் இலங்கைக்கான முன்னாள் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் சில திருத்தங்களை மேற்கொண்டு புலிகளிடம் கையளித்தார் என அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டமை ஆச்சரியத்தை ஏற்படுத்துவதாக உள்ளது.

இவ்வாறு அரசாங்கத்தின் ஆவணங்களைத் திருத்தும் அதிகாரம் எவ்வாறு நோர்வேயின் முன்னாள் தூதுவருக்கு வழங்கப்பட்டதென்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

# சாதகமான பதில் கிடைக்காவிடின் கலந்துரையாடலிலிருந்து வெளியேறுவோம்

## கடற்படையுடனான கலந்துரையாடல் பற்றி கடற்றொழிலாளர் சங்கம்

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் அனுசரணையுடன் நாளை நடைபெறவுள்ள யாழ் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடலில் தமக்குச் சாதகமான தீர்வுகள் கிடைக்காவிட்டால் அக்கலந்துரையாடலிலிருந்துவெளிநடப்புச் செய்யப்போவதாக வடமராட்சிவடக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசச் செயலாளர் சூரியகுமார் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி வடக்குக்குப் பொறுப்பான 524 ஆம் பிரிகேட் தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் கடற்படையினரால் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், பாஸ் முறைகள், சோதனை நடவடிக்கைகள் தொடர்பாகவும்,அதற்கானதீர்வுகள் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது.

இக்கலந்துரையாடலில் படையினர் தமக்குச் சாதகமான பதில்தராமல் ஏமாற்றினாலோ அல்லது கண்காணிப்புக் குழுவினர் பக்கச் சார்புடன் செயற்பட்டாலோ கலந்துரையாடலிலிருந்து வெளிநடப்புச் செய்யப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் படையினருக்கோ அல்லது வேறு சதிகாரக் கும்பல்களுக்கோ அஞ்சாது கடற்படையினரின் கெடுபிடிகளை வெளிப்படுத்த ஒவ்வொரு கடற்றொழிலாளியும் முன்வர வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

# ஐ.தே.க. வைச் சேர்ந்த இரு குழுவினரிடையே மோதல் துப்பாக்கி , கைக்குண்டுகள் உபயோகம்

கம்பகா மாவட்டத்தில் ஐ.தே. கட்சியைச் சேர்ந்த இரு குழுவினருக்கிடையே ஏற்பட்ட மோதலினால் அப்பகுதியிலுள்ள இரு கிராமங்களில் பதட்டநிலை ஏற்பட்டது.

நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்றதாகக் கூறப்படும் இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது, கட்டான தேர்தல் தொகுதிக்குட்பட்ட ஹல்பே, தெல்கஸ் ஹந்திய ஆகிய கிராமங்களை முற்றுகையிட்ட ஐ.தே.க.எம்.பி ஒருவரின் ஆதரவாளர்கள் சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேராவின் ஆதரவாளர்களை துரத்தித் துரத்தி தாக்கியதாகவும் கைக்குண்டுகளை எறிந்ததாகவும் கூறப்படுகிறது.

ஜோசப் மைக்கல் பெரேராவின் குழுவினர் கத்தி, கைக்குண்டு துப்பாக்கி, மண் நிரப்பிய போத்தல்கள், தடிகள் என்பனவற்றைக் கொண்டு தாக்கியதாகவும் இருபகுதியினரும் பலத்த மோதலில் ஈடுபட்டதாகவும் கூறப்படுகின்றது.

இம்மோதலில் 10 பேர் காயமடைந்ததாகவும் அவர்களில் இருவர் பலத்த காயங்களுக்குள்ளாகி நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக கொச்சிக்கடை பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்ட போதும் நிலைமை சுமுக நிலைக்கு வராததையடுத்து பேலியகொடை பொலிசாருககு அன்று இரவு முறைப்பாடு செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படிசம்பவத்திற்குஅப்பகுதிகளில் ஆற்று மணல் அள்ளுவதில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாக கூறப்படுகிறது.

### ஒரே...

ஒருவரின் வீட்டிற்கு இவர்கள் புறப்பட்டுச் சென்றிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆயினும் இவர்கள் வீடு திரும்பவில்லை எனவும் குறித்த உறவினர்கள் வீட்டிற்கு வந்து சென்றிருக்கவில்லை எனவும் தற்போது தெரிய வந்துள்ளது.

தற்போது இது தொடர்பாகக் காணாமல் போனவர்களின் உறவினர்களால் மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தில் நேற்றுமுறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.

காணாமல் போனவர்களின் தகவல்கள் பற்றித் தெரிந்தவர்கள் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் தகவல் தருமாறு இணைப்பதிகாரி கோரிக்கை விடுத்துள்ளார். (27)


### நேர்முகத்தேர்வு

குருகுலம் சிறுவர் இல்லத்தின் பணியாளர் பணிநிலைக்கு விண்ணப்பம் செலுத்தியவர்களுக்கான நேர்முகத் தேர்வு 06.08.2003 07.08.2003 ஆம் நாள் புதன் வியாழன் காலை 10.00மணி தொடக்கம் மாலை 5 மணி வரை சிறுவர் இல்லத்தின் பணிமனையில் நடை பெறும்.

மேற்படி பணிகளுக்கு விண்ணப்பம் செய்தவர்கள் கல்வித்தகைமை சான்றிதழ்கள் ஏனைய ஆவணங்களுடன் வருகைதருமாறு வேண்டுகின்றேன்.

இயக்குநர்,
குருகுலம் சிறுவர் இல்லம்,
ஜெயந்திநகர். கிளிநொச்சி.


### புலிகளுக்கு...

கும் இடையில் பாரதூரமான வேறுபாடுகள் இருப்பதால் இது தொடர்பான இரகசியத்தை தொடர்ந்தும் பேணமுடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்த விடயம் குறித்துத் தமது கட்சியின் தலைவர்களுக்கும் பொதுமக்களுக்கும் அறிவிக்க தீர்மானித்துள்ளதாகவும் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

### பிராந்திய...

அத்துடன் இந்தியா இராஜதந்திரதியில் உறவுகளை மேம்படுத்த வேண்டுமெனக் கோரிக்கை விடுத்தார். இந்தியாவுடன் எந்தவிதமான மோதல் நடவடிக்கைகளையும் விடுதலைப் புலிகள் மேற்கொள்ளப் போவதில்லை எனவும் ஜெயலலிதாவின் போக்கிற்கு எதிராகத் தாங்கள் செயற்படப்போவதில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

ஆனாலும் தமிழரின் விடுதலைப் போராட்டத்தை அவர்கள் தமது அரசியல் நலனுக்காகப் பயன்படுத்தி வருவதாகக் குற்றம் சாட்டிய அவர் தமிழக முதல்வர் ஜெயலலிதா அண்மையில் இலங்கைக்கான பாலம் அமைப்பதற்குத் தெரிவித்து வரும் எதிர்ப்புகளுக்குத் தனது தனிப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் வரவேற்புத் தெரிவித்தார்.

இவ்வாறான பாலம் ஒன்றை அமைப்பதால் ஈழத்தமிழர்களிடையே ஏற்படக் கூடிய கலாச்சாரச் சீரழிவுகளைத் தடுத்து நிறுத்த முதலமைச்சர் ஜெயலலிதா உதவியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

"அக்கினிச்சுவாலை" இராணுவ நடவடிக்கையின் பின் சமாதான நடவடிக்கை மூலம் விடுதலைப் புலிகள் சர்வதேச அரங்கில் புதிய பாதை ஒன்றை உருவாக்கியுள்ளதாகத் தெரிவித்த அவர் சர்வதேச ரீதியாக மிகவும் தெளிவான பார்வையுடன் விடுதலைப்புலிகள் உள்ளதாகவும் அதன் படியே அவர்கள் அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகவும் தெரிவித்தார். (27)

# வவு.கலாச்சாரப் பேரவையில் பிரதேச இலக்கிய விழா

(வவுனியா செய்தியாளர்)

வவுனியாகலாச்சாரப்பேரவை நடாத்தும் வவுனியா பிரதேச இலக்கிய விழா இன்றும் நாளையும் வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

காலை, மாலை என இரு அமர்வுகளாக நடைபெறவுள்ள இவ் இலக்கியவிழாவில் காலைஅமர்வில் ஆய்வரங்க நிகழ்வுகளும், மாலை அமர்வில் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

இன்று நடைபெறவுள்ள காலை அமர்வு முன்னாள் கல்வி அதிகாரி சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி திரு.க.பேர்ணாட், யாழ் பல்கலைக் கழக வவுனியா வளாக முதல்வர் திருமதி ர.மகேஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்வர்.

மாலை அமர்வு தமிழ்மணி அகளங்கன் தலைமையில் நடைபெறும். இதில் பிரதமவிருந்தினர்களாக வன்னி மாவட்டநாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. ஒஸ்வேல்ட், வவுனியா மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வி அலை ஆகியோர்கலந்து கொள்வர். (10)

# லெப்.செந்தூரன் ஞாபகார்த்தமாக 15 மைல் மரதனோட்டப் போட்டி

தமிழீழ விளையாட்டுத் துறையின் அனுசரணையுடன் இணைப்பாளர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் நடாத்தும் லெப். செந்தூரன் ஞாபகார்த்தப் போட்டியின் 15 மைல் கொண்ட மரதனோட்டப் போட்டி நேற்று முன்தினம் காலை 6.30 மணியளவில் ஆரம்பமானது. மேற்படி போட்டியின் ஆரம்பத்தில் வீரர்கள் அறிமுகத்தில் முல்லை மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் இயலரசன் அவர்களும் முல்லை. மாவட்ட அரசியல்துறை நிர்வாகப் பொறுப்பாளர் தர்மேந்திரன், முல்லை மாவட்ட நிதிப் பொறுப்பாளர் புகழரசன் ஆகியோர் கலந்து கொண்டனர்மேற்படி போட்டியை புதுக்குடியிருப்புப் பிரதேசப் பொறுப் பாளர் ஆரம்பித்து வைத்தார். இப் போட்டியில் 1 ம் இடத்தை மு.இராம கிருஸ்ணன் சுப்பறாங் வி.கழகம், 2ம் இடம் க.மயூரன் செல்வா விளை யாட்டுக் கழகம், 3ம் இடம் இ.வாணன் சுப்பறாங் வி.கழக ஆகி யோர் பெற்றனர். இப் போட்டியில் 35 பேர் கலந்து கொண்டனர். இதன் தொடர் போட்டியாக இன்று இரவு மின் ஒளியியல் உதை பந்தாட்டம் அரையிறுதிப் போட்டியும் நாளை இறுதிப் போட்டியும் இடம் பெறும். அரையிறுதிப் போட்டியில், லக்கிஸ்ரார் அணியை எதிர்த்து புதுக்குடியிருப்பு சுப்பறாங் விளையாட்டுக் கழகம் அடுத்த போட்டி உருத்திரபுரம் உழவர் ஒன்றியம் விளையாட்டுக் கழக அணிக்கும் மணற்காடு சென்.பிலிப் மேரியாள் வி.க. அணிக்கும் இடம் பெறும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## உயர்பாதுகாப்பு வலயம் குறித்து

# சரத்பொன்சேகா இல்லாதவேளை எம் முடிவும் எடுக்கப்படமாட்டாது

யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா இராணுவத்தின் தலைமைத் தளபதியாகவுள்ள சரத்பொன் சேகா மேற்கொள்ளவிருக்கும் வெளிநாட்டுப் பயணம் குறித்துவெளியான ஊடகத் தகவல்கள் குறித்து இராணுவத் தலைமையகம் விளக்கமளித்துள்ளது. இந்தப் பயணத்தை மேற்கொள்வதற்குப் பாதுகாப்பு அமைச்சு பொன்சேகாவுக்கு அனுமதி வழங்கியுள்ளதாகவும், இவர் வெளிநாடு சென்றிருக்கும் சமயத்தில் மேஜர் ஜெனரல் பரம்குலதுங்க பதில் பிரதம தளபதியாக நியமிக்கப்படவுள்ளார்.சரத் பொன்சேகா விடுப்பில் இருக்கும் காலத்தில் யாழ்ப்பாணத்தில் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக எவ்வித பாரதூரமான விளைவுகளும் ஏற்படமாட்டாது என்று இராணுவம் மீண்டும் அறிவித்துள்ளது.

### குரங்குப் ...

கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பான யோசனைகள் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கான வரைவே. இதில் பல குறைகள் உள்ளன. இவற்றை எமது சட்டத் துறை அறிஞர்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் ஆராய்ந்து வருகின்றார்கள் என்றும் மேலும் அவர் தெரிவித்தார்.

நேற்று மாலை 4.00 மணியளவில் சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான உலங்குவானூர்தி மூலம் திருமலை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள சம்பூரில் மைதானமொன்றினை வந்தடைந்தார்.

அதன்பின்னர் ஊடகவியலாளர்களை அரசியல்துறைப் பொறுப்பாளர் சந்தித்தார். இச்சந்திப்பு தமிழீழ விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட நடுவப் பணியகத்தில் இடம்பெற்றது.

இவ்வூடகவியலாளர் சந்திப்பின்போது திருமலை மாவட்டக் கட்டளைத் தளபதி கேணல் பதுமன், மற்றும் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திலக் ஆகியோரும் கலந்து கொண்டனர். இதேவேளை இன்று காலை அரச அதிகாரிகளும் அரசியல்துறைப் பொறுப்பாளரைச் சந்திக்கவுள்ளார்கள்.அத்துடன் அவர் திருமலை மாவட்டத்தில் கணினிப் பயிற்சி நிலையம் ஒன்றையும் திறந்துவைக்கவுள்ளார். (25)

### நேரடிப்...

கிரஸ் தலைவரும் கப்பல் போக்குவரத்து அமைச்சருமான ரவூப் ஹக்கீமும் பிரதமரிடமும் ஏனைய பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட அமைச்சர்களிடமும் தெரிவித்ததாகத் தெரியவருகிறது.

### புதுவை...

யினை தமிழீழ விடுதலைப் புலிகள் ஏட்டின் ஆசிரிய பீடத்தைச் சேர்ந்த அன்பு மாறன் நிகழ்த்தினார். தலைமைஉரையை அடுத்து நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையை தமிழீழவிடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் பாலகுமாரன் நிகழ்த்த வெளியீட்டுரையைவெளிச்சம் சஞ்சிகை ஆசிரியர் சி. கருணாகரன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து 'உலைக்களம்' நூலினை தமிழீழ அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் சோ. தங்கன் வெளியிட்டுவைக்க சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பெற்றுக்கொண்டார் இதனையடுத்து சிறப்புப் பிரதிகளை யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் சி. மோகனதாஸ் வழங்கினார்.

இதனையடுத்து நூலின் மதிப்பீட்டுரையினை பேராசிரியர் அ.சண்முகதாஸ், எழுத்தாளர் ஐ.சாந்தன், அரசியல்ஆய்வாளர் மு.திருநாவுக்கரசு ஆகியோர் நிகழ்த்தினர். பதிலுரையை நூலாசிரியரும் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளருமான புதுவை இரத்தினதுரை நிகழ்த்த, நன்றியுரையைக் கலை பண்பாட்டுக் கழகத்தைச் சேர்ந்த வளநாடன் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் எழுத்தாளர்கள் ஆக்க கர்த்தாக்கள், படைப்பாளிகள் இலக்கிய ஆர்வலர்கள் என பெருமளவானோர் கலந்து கொண்டார்கள்.

இந்நூலுக்கு அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் அவர்களின் முன்னுரையும் புலனாய்வுத் துறைப் பொறுப்பாளர் பொ. பொட்டு அவர்கள் மதிப்பீட்டுரையும்வழங்கியுள்ளனர். (33)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 02ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.